# பத்திரிக்கை செய்தி

## அரசு ஊழியர்களுக்கான மாநில அளவிலான கூடைப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளுக்கு வெற்றிக்கோப்பைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவின் சார்பில், 2016–2017 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான அரசு ஊழியர்களுக்கான **கூடைப்பந்து (Basketball)** போட்டிகள் **28.03.2017 முதல் 30.03.2017 வரை** பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் உள்ள மின்னொளி கூடைப்பந்து மைதானத்தில் வைத்து நடைபெற்றது.

இதில் 29.03.2017 அன்று மாலை நடைபெற்ற போட்டிகளில், **முதலில் ஆடிய ஆண்கள் அணியில், திருநெல்வேலி அணி 71–63 என்ற புள்ளி கணக்கில் இராமநாதபுரம் அணியை வென்றது. 2வது போட்டியில் தஞ்சாவூர் அணி 39–35 என்ற புள்ளி கணக்கில் மதுரை அணியை வென்றது.** மூன்றாவதாக நடந்த **பெண்கள் போட்டியில் திருநெல்வேலி அணி 22–07 என்ற புள்ளி கணக்கில் தூத்துக்குடி அணியை வென்றது. நான்காவது ஆண்கள் போட்டியில், திருநெல்வேலி அணி 46–37 என்ற புள்ளி கணக்கில் திண்டுக்கல் அணியை வென்றது. கடைசி போட்டியில் தேனீ அணி 55–13 என்ற புள்ளி கணக்கில் தஞ்சாவூர் அணியை வென்றது.**

**30.03.2017 அன்று காலையில் நடைபெற்ற இறுதி போட்டியில், தேனீ மாவட்ட அணி 54–36 என்ற புள்ளி கணக்கில் திருநெல்வேலி அணியை வென்றது. போட்டிகளின் முடிவில், ஆண்கள் அணியில், தேனீ மாவட்டம் முதல் இடத்தையும், திருநெல்வேலி மாவட்டம் இரண்டாவது இடத்தையும், தஞ்சாவூர் மாவட்டம் மூன்றாவது இடத்தையும் பெற்றார்கள். பெண்கள் அணியில் திருநெல்வேலி மாவட்டம் முதல் இடத்தையும், தூத்துக்குடி மாவட்டம் இரண்டாவது இடத்தையும், ஈரோடு மாவட்டம் மூன்றாவது இடத்தையும் பெற்றார்கள்.**

முதல் இடங்களில் வெற்றபெற்ற மாவட்டங்களுக்கு, 30.03.2017 அன்று காலை 9.00 மணிக்கு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் **முனைவர்.மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள்** தலைமை தாங்கி முதல் பரிசாக வெற்றிக்கோப்பைகளையும், இரண்டாவது பரிசாக வெற்றிக்கேடயத்தையும் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி மண்டல முதுநிலை மேலாளர் திரு. ப.சிவகுமார் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.** திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் **முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள்** அனைவரையும் வரவேற்றார்கள். இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாவட்ட கூடைப்பந்து கழக செயலாளர் திரு. தங்க மாரி முத்து, SDAT கூடைப்பந்து பயிற்றுநர் திரு. பழனி விக்னேஷ், நடுவர்களாக பணியாற்றிய திரு. சத்யா, திரு.நெல்சன், திரு.கோபி, திரு. ரவிசங்கர், திரு. முத்து, திரு. ரவிகுமார், திரு. கண்ணன், திரு. ராஜ மணி, திரு. சத்ய சங்கர், திரு. தினேஷ், திரு. ஐயப்பன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்கள் தமது செய்தி குறிப்பில் தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி